8. அறிவிப்பு

சம்பளம் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு 1981

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 81/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் நமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி).

(இ) சம்பளம் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு 1981

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே...

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, நம் முதல் அமைச்சர் அவர்களால் டேபிளில் ப்ளேஸ் செய்யப்பட்ட-கலக்டீவ் ரெஸ்பான்ஸிபிலிட்டி இருந்தாலும் கூட தொடர்ந்து இந்தச் சட்டமன்றத்தில் மசோதாக்கள் முதல் அமைச்சர் அவர்கள் பெயரால்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏற்கனவே இப் பிரச்னைபற்றிக் கிளப்பப்பட்டு எந்த அமைச்சரும் கொண்டு வரலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்களே இதைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். எந்த அமைச்சரும் கொண்டு வரலாம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

" 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 81/1981) ஆய்வுக்கு† எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

---

† 1981-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 31-ம் தேதியிட்ட தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.